7

**தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் செயல்முறை உத்திரவு பிறப்பிப்பவர்: திரு.க.சரவணகுமார் B.B.A.,B.L.,**

ந.க.எண். 6652/ 2021/எம்சிஎப்1, நாள்: 16.09.2021

| பொருள்: | அனுமதியற்ற மனைபிரிவு–தஞ்சாவூர் மாநகராட்சி– வார்டு எண்–1, பிளாக் எண்–41, நகரளவு எண்– 1585/2 (பழைய நகரளவு எண்.1585) அமைந்துள்ள மனை எண். 1, 1A,2,2A,3,3A எண்ணுக்கு உண்டான 1680 ச.மீ மனையினை வரன்முறைப்படுத்துவது –தொடர்பாக |
|---|---|
| பார்வை: | 1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, (UD4(3)) நாள். 04.05.2017.<br>2. அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, (UD4(3)) நாள். 13.10.2017.<br>3. மனுதாரர் திரு.R.அரவிந்த், என்பவரின் விண்ணப்பம் நாள்–இல்லை<br>4. உறுப்பினர் செயலர், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண் 2199/2020/தஉதிகு நாள் 06.05.2021<br>5. இவ்வலுவலக அறிவிப்பு நாள்–14.08.2020<br>6. மனுதாரரின் கட்டணம் செலுத்திய நாள்–12.07.2021 |

*********

பார்வை 1 மற்றும் 2 அரசாணைகளின்படியும், தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்–1, பிளாக் எண்–41, நகரளவு எண்– 1585/2 –ல் அமையப்பெற்ற மனையினை வரன்முறைப்படுத்த பார்வை–4இல் காணும் மனுதாரர் விண்ணப்பம் அளித்துள்ளார். பார்வை–3இல் காணும் உறுப்பினர் செயலர், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகளில் தெரிவித்துள்ளவாறு, மேற்படி மனை பிரிவானது தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம் வேலூர் வட்டம் நகரளவு எண்– 1585/2 கீழ்கண்டவாறு

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) |
|---|---|
| 1, 1A,2,2A,3,3A | 1680 ச.மீ |

மேற்படி 1680 ச.மீ பரப்பளவில் அமையும் வேலூர் வட்டம் , ராஜராஜன் சோழன் நகர்–1 குடியிருப்பு மனை பிரிவுக்கு அரசாணை எண் 21 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, 4(3) நாள்–05.02.2019 இன்படி வரன்முறை கட்டணமாக ரூ.2,52,000/–ஐ அரசு சார்நிலை கருவூலத்திலும், அபிவிருத்தி கட்டணமாக ரூ.8,40,000/–ஐ இவ்வலுவலகத்திலும் செலுத்தியுள்ளார். எனவே மேற்படி மனையினை குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படியும் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் மனை வரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

மேலும் மனுதாரர் தவறான தகவல்கள் அளித்திருந்தால் இவ்வுத்தரவு ரத்து செய்வதுடன், செலுத்தப்பட்ட தொகையையும் திரும்ப வழங்க இயலாத நிலை ஏற்படுவதுடன் இது குறித்து சட்ட ரீதியான தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து உத்திரவிடப்படுகிறது

1.....புத்தகம் 2021ம் வருடத்திய 3062ம் ஆவணம்
...14........தாள்களைக் கொண்டது.
.9.. .வது தாள்
சார் அலுவலர்

ஆணையாளருக்காக, 16/9/2021
தஞ்சாவூர் மாநகராட்சி.
16/09/2021

பெறுநர்.
R.அரவிந்த்,
எண்.12, கோட்டூர் கார்டன்,
4வது மெயின் ரோடு,
கோட்டூர்புரம்,
சென்னை.

தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

ந.க.எண்:2199/2021தமா3

நாள்.06.05.2021

மனுதாரர் **R.அரவிந்த்** என்பவரியிடமிருந்து பெறப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி, தஞ்சாவூர் மாநகராட்சி, வார்டு எண்.1, பிளாக எண்.41, **ந.அ.எண்.1585/2** (பழைய ந.அ.எண்.1585)-ல் அமையும் மனைப்பிரிவில் மனை எண்:1,2,3-ஐ வரன்முறைப்படுத்தக் கோரி பெறப்பட்ட விண்ணப்பம் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உள்ளாட்சி அளவிலேயே அனுமதி வழங்க மனைப்பிரிவிற்கு **SPF No.129/2021-என** எண்ணிடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கான கட்டமைப்பு மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

கூராய்வு கட்டணமாக ரூ.1500/-ஐ இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டு **Registration No.**DTCP/L/0809631/2017பெறப்பட்டுள்ளது

நிபந்தனைகள்:-

1.அரசாணை எண்.78, 172 மற்றும் 21 வீ.வ(ம) நவ துறை. நாள்.4.5.2017,13.10.2017 மற்றும் 05.02.2019-ன்படி மனைக்கான வரன்முறைப்படுத்துதல் கட்டணத்தினை கீழ்க்ணட அரசுக்கணக்குத் தலைப்பில் செலுத்தப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| **0217 Urban Development- 60 Other Urban Development Schemes - 800 Other Receipts - AT Receipts under Regularization Charges of Unapproved Layouts and Plots –DTCP 27 Non Taxation Fees- 30 Regularisation**<br>**DPC: 0217 60 800 AT 2730** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தப்பட் வேண்டும். |

2.வளர்ச்சிக் கட்டணத்தினை உள்ளாட்சிகளின் வங்கிக்கணக்கில் மனுதாரரிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

3.நில. உரிமம், மனை அளவுகள், அணுகுசாலை ஆகிய விபரங்களை உள்ளாட்சியால் உறுதிசெய்து கொள்ளப்படல் வேண்டும்.

4.மனைப்பிரிவின் ஊடே உயர் அழுத்த மின்கோபுர பாதை செல்லுமாயின் அம்மனை வரன்முறைப்படுத்த இயலாது.

5.மனையிடத்திற்கு மின்பாதைகளுக்கும் இடையே குறைந்தபட்ச இடைவெளி மின்துறை வழிகாட்டுதலின்படி நிலைநிறுத்தப்படல் வேண்டும்.

6.மனையின் ஊடே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூறு இன்றி பாதுகாக்கப்படல் வேண்டும்.

7.திட்டசாலையை பாதிக்கும் இனைங்களுக்கு இவ்வுத்தரவு பொருந்தாது.

8.மேலே வரிசை எண்.1-ன்படி அரசுக் கணக்கில் தொகை செலுத்திய பின்னர் அசல் சலான் ஒரு படி இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்பார்வையாளர்
தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்/
தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம்.

இணைப்பு:-
மனைப்பிரிவு வரைபடம்

பெறுநர்:-
ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்:-
R.அரவிந்த்
No.12, கோட்டூர் கார்டன்
4-வது மெயின் ரோடு,
கோட்டூர்புரம்,
சென்னை